

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பெரியக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் குடியரசு தினவிழா மற்றும் பாரதியார் பிறந்தநாள் விழா முன்னிட்டு குறுவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நேற்று (06.11.2025) கேடயங்களை வழங்கி, பாராட்டு தெரிவித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கே.டி.உதயம், நவீன் குமார், மேசியா, கோபி பேரறிவாளன், செல்லச்சாமி, சுபாஷ் சந்திர போஸ், சுப்பிரமணியம், வழக்கறிஞர் வெற்றிவேல், வடிவேல், குமரேசன், அன்பழகன், ஜெயலானி, நாகராஜன், இராஜகுமார், தளவாய், மணி, பட்டேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம்!

# இராம. சுப்பையா 118வது பிறந்தநாள் - செ.மாதவன் - எஸ்.எஸ்.தென்னரசு திருஉருவச்சிலைகள் திறப்பு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை,நவ.7-

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற நவம்பர் 14, 15ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் மக்கள் நல சாதனைகளை எடுத்துரைக்கும் வகையில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் செய்து கழக மற்றும் அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.இதனால் கழகத் தொண்டர்களிடையே மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்பட்டு வருகிறது.

கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை காரைக் குடி மாநகருக்கு வருகிறார்.



அழகப்பா பல்கலைக்கழக சாலையில் உள்ள பி.எல்.சி.டி அரங்கத்தில்

மாலை 6 மணி அளவில் பெரியார் பெருந்தொண்டர்,கழகத் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற டால்மியா புரத்தினை கல்லக்குடி என்ற பெயர் மாற்றத்திற்காக சிறைக்கு சென்ற காரைக்குடி ராம.சுப்பையா அவர்களின் 118 வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகிறார்.

மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் தலைமையில் செல்வின் சௌந்தர்ராஜன், மா.உமாபதி, ஆர். சிங்கராயர்,பெல். ராஜன், பா. எட்வின், இரா. உமா, கா. சு. நாகராஜன் ஆகியோர் முன்னிலையில் 118 வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திராவிடர் கழக பிரச்சார செயலாளர் அ.அருள்மொழி, காரைக்குடி மாநகர மேயர் எஸ். முத்து துரை, மாநகர துணை மேயர் நா.குணசேகரன் ஆகியோர் இராம.சுப்பையாவிற்கு புகழ் உரை செலுத்துகிறார்கள். அதை தொடர்ந்து திரைப்பட இயக்குனர் எஸ். பி. முத்துராமன், சீத .கணதம், சுப. சுவாமிநாதன் ஆகியோர் ராம.சுப்பையாவின் நினைவலைகளை பகிர்ந்து கொள்கிறார்கள். முன்னதாக சிற்பி . செல்வராஜ் வரவேற்று பேசுகிறார். திராவிட இயக்க தமிழர் பேரவை செயலாளர் சுப. வீரபாண்டியன் நன்றி கூறுகிறார் .

நிகழ்ச்சி ஏற்பாடுகளை திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுசெயலாளர் சுப. வீரபாண்டியன், இயக்குனர் சுப. முத்துராமன் மற்றும் விழாக் குழுவினர் செய்து வருகிறார்கள். அன்று இரவு துணை முதலமைச்சர் அவர்கள் காரைக் குடியில் தங்குகிறார். 15ஆம் தேதி மறுநாள் 15ம்தேதி சனிக்கிழமை காலை 9 மணி அளவில் சிங்கம்புணரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரூராட்சி மன்ற அலுவலக புதிய கட்டிடத்தினை திறந்து வைத்து விழா பேருரை ஆற்றுகிறார். அதை தொடர்ந்துகாலை 10.00, மணிக்கு சிங்கம்புணரியில் 50 ஆண்டுகளுக்கு முன்பாக முன்னாள் அமைச்சர் செ. மாதவனால் கட்டப்பட்ட அண்ணா மன்றம் புதுப்பிக்கப்பட்டுள்ளதை திறந்து வைத்தும், முத்தமிழ் அறிஞர் கலைஞர், முன்னாள் அமைச்சர் செ. மாதவன் ஆகியோரின் திருவுருவச் சிலையினை. திறந்து வைத்து விழா பேருரை ஆற்றுகிறார். அதனைத்தொடர்ந்து 11.30 மணிக்கு கிருங்கா கோட்டைக்கு முன்னாள் அமைப்பு செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு முயற்சியினால் பெரியார் வைகை தண்ணீர் கொண்டு வந்ததை பாராட்டி கிருங்கா கோட்டை கிராம மக்களால் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு விற்கு அமைக்கப்பட்ட கருங்கல் சிலையை மாற்றி மார்பளவு நிறுவப்பட்டுள்ள எஸ்.எஸ்தென்னரசு வெண்கலச் சிலையை திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து மாலை. 4.00 மணி அளவில் சிங்கம்புனரி பாரிவள்ளல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செ. மாதவனின் முழு உருவ வெண்கலச்சிலையை திறந்து வைக்கிறார். அதை தொடர்ந்து பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இத்தகவலை கூட்டுறவுத் துறை அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மாவட்டம் – கோட்ட அளவிலான

# வணிக வரித்துறை அலுவலர்களின் பணி திறனாய்வுக் கூட்டம் !

## வணிகவரி – பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

நெல்லை, நவ. 7-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (06.11.2025) 2025-26 ஆம் நிதியாண்டிற்கான அக்டோபர் மாதம் வரையிலான திருநெல்வேலி கோட்ட அளவிலான வணிகவரித் துறை அலுவலர்கள் பணித் திறனாய்வுக் கூட்டம் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், வணிகவரித் துறை ஆணையர் எஸ்.நாகராஜன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து வணிகவரித் துறையின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதாக கிடைத்திடும் வகையில் தொடர்ந்து பல்வேறு சீர் திருத்தங்களை செய்து வருகிறார்கள்.மேலும்,அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டவும் பல்வேறு தொடர் ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.அரசுக்கான வருவாய் நிதி ஆதாரமாக வணிக வரி மற்றும் பதிவுத் துறை விளங்குகிறது.மேலும் அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு ஆலோசனைகள் தொடர்ச்சியாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருவதோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வணிகவரி கோட்டங்களுக்கும் தொடர்ச்சியான பணித்திறனாய்வுக் கூட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றைய தினம் திருநெல்வேலி, கன்னியாகுமரி,தூத்துக்குடி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களை ஒருங்கிணைந்த கோட்ட அளவிலான வணிகவரித்துறை அலுவலர்களுடன் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான அக்டோபர் மாதம் வரையிலான பணித்திறனாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

வணிகவரித்துறையின் நிதி ஆதாரத்தை பெருக்கிடும் நடவடிக்கையாக அனைத்து வணிகவரி கோட்டங்களுக்கும் தொடர்ச்சியான ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள அலுவலர்களின் கருத்துக்களும் கேட்டறியப் பட்டுள்ளது.

தற்பொழுது மாறுதலுக்குட்பட்ட ஒன்றிய அரசின் சரக்கு மற்றும் சேவை வரி, ஏற்றுமதி, இறக்குமதி வரி உள்ளிட்ட அனைத்து இனங்களிலும் தற்போது நிலவிவரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மாநில அரசின் வருவாயை உயர்த்திட தேவையான நடவடிக்கைகளை அலுவலர்கள் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

நிகழ்வில்,மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா, கூடுதல் ஆணையர்கள் சுபாஷ் சந்திரபோஸ், பரமேஸ்வரன், வணிகவரித் துறை இணை ஆணை யர் முருககுமார், பானு பிரியா உட்பட வணிக வரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட

# தி.மு.க. - இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, நவ.7-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 05.11.2025 - புதன்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் பேசியதாவது: தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கொண்டு வந்து மக்களின் வாக்கு உரிமையை பறிக்கும் நடவடிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வருகிறது. மக்களின் வாக்குரிமையை பறிப்பது ஜனநாயகத்துக்கு எதிரானது. வாக்காளர் திருத்தம் பணிக்காக வீடுவீடாக விண்ணப்பங்கள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தி.மு.க.வினர் மற்றும் அதன் கூட்டணி கட்சியினர் கூடுதல் கவனம் செலுத்தி ஒன்றிணைந்து விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

குறிப்பாக வாக்காளர் திருத்தம்மூலம்சிறுபான்மையினரை குறிவைப்பார்கள். சிறுபான்மையினர் பலர் வெளிநாடு, வெளி மாநிலங்களில் வேலை செய்வார்கள். அவர்களது வீட்டில் உள்ளவர்கள் படிவத்தை வாங்கி அதற்கான ஆவணத்தை கொடுத்து உள்ளார்களா என பார்க்க வேண்டும். இதில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆகியோருடன் நீங்களும் வீடுவீடாக சென்று பணியாற்ற வேண்டும் என மாவட்டச் செயலாளர் ரெ. மகேஷ் தெரிவித்தார்.

கூட்டத்தில் காங்கிரஸ் கிழக்கு மாவட்ட தலைவர் கே.டி. உதயம், மாநகர மாவட்ட தலைவர் நவீன் குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் மேசியா, கோபி பேரறிவாளன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் செல்லச்சாமி, கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சுபாஷ் சந்திர போஸ், திராவிட கழகம் மாவட்ட தலைவர் சுப்பிரமணியம், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வெற்றிவேல், மக்கள் நீதி மய்யம் நிர்வாகி வடிவேல்,

ஆதிதமிழர் கட்சி மாவட்ட செயலாளர் குமரேசன், திராவிட தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர் அன்பழகன், மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகி ஜெயலானி, தமிழக வாழ்வுரிமை கட்சி நிர்வாகி நாகராஜன், சமத்துவ மக்கள் கழகம் நிர்வாகி இராஜகுமார், அகில இந்திய பார்வர்டு பிளாக் நிர்வாகி தளவாய், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் மணி, ஆம் ஆத்மி கட்சி நாகர்கோவில் தொகுதி ஒருங்கிணைப்பாளர் பட்டேல் ஆகியோர் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்!

நாகர்கோவில், நவ.7-

”என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி எனும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முழக்கத்தின்படி, 2026 – சட்டமன்ற தேர்தலில் ”வெல்வோம் 200, படைப்போம் வரலாறு எனும் வெற்றிப் பயணத்தை தொடரும் வகையில், கழக துணை பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்ற குழு தலைவரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம் 06.11.2025, வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு நாகர்கோவில், இருளப்பபுரம், சீதாலெட்சுமி திருமண மண்டபத்திலும், காலை 11.00 மணிக்கு கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு சுசீந்திரம், செல்வம் திருமண மண்டபத்திலும், மதியம் 2.00 மணிக்கு குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு குளச்சல், சாஸ்தான்கரை, P.M.M. ஆடிட்டோரியத்திலும் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டங்களில் கழக சட்டத் துறை இணைச் செயலாளர் கே. எஸ்.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) பணிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

இந்த கூட்டங்களில் சட்டத்துறை துணை செயலாளர் திரு. எஸ். ராஜா முகமது, தொகுதி பார்வை யாளர்கள் C.S.ஆனந்த், ரீதர் ரொட்ரிகோ, மாலை ராஜா, மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரத்தினம், மாவட்ட துணை செயலாளர்கள் கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், தலைமை செயற்குழு உறுப்பினர் என்.தாமரைபாரதி, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் என்.நாகூர் கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என். பி.துரை, த.ஜீவா உட்பட பேரூர், வட்ட கழக செயலாளர்கள், அனைத்து வாக்குச்சாவடிகளின் BLA2, BDA மற்றும் கழக வழக்கறிஞர்கள், DLC, CLC, ULC, TLC உள்ளிட்ட அனைவரும் இந்த சிறப்பு வாக்காளர் திருத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்